பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 01 ஞயிற்றுக்கிழமை 14.04.2024 கதிர் 159

# தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விருப்பம் ரணிலிடம் உண்டு

### அவரை நம்பாவிட்டாலும் தன்னை நம்புங்கள் என்கிறார் டக்ளஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் தற்போது விருப்பத்துடன் உள்ளார் என்று தெரிவித்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

“கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறான நிலைப்பாட்டில் இருந்தார் என்பது முக்கியமல்ல. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு விடயங்களை முன்னோக்கிகொண்டு செல்வதற்கான விருப்பம் தற்போது அவரிடம் காணப்படுகிறது”என்றார்.

அதுமட்டுமல்லாது தற்போதைய காலச்சூழலில் நாட்டைப் 2

## இனி அது ரகசியம் அல்ல!

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக வடக்குமாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்திருந்த கூட்டம் பற்றிய விவரங்களை நேற்றைய எனது பத்தியில் பார்த்துவிட்டு காலைக்கதிரின் நீண்ட நாள் வாசகர் ஒருவர் பல நாள்களுக்குப் பின்னர் அழைப்பெடுத்தார். எடுத்த உடனேயே, ”தமிழர்களின் ஒற்றுமை ஒற்றுமை என்று சொல்லிக்கொண்டு யார் தலைமையில் ஒற்றுமை என்று பிரிந்து நிற்கிறார்களே, இவர்கள்தான் தமிழர்களுக்குத் தீர்வு வாங்கித் தருவார்கள் என்று நீங்கள் (பத்திரிகையாளர்கள்) எல்லோரும் வால் பிடிக்கிறீர்கள்” என்று காரசாரமாகவே தொடங்கினார்.

நான் புரியாதவன் போன்று ”ஏன், என்னவாயிற்று?” என்றேன்.

’’விக்னேஸ்வரன் கூட்டிய கூ-ட்டத்திற்கு மற்றைய தலைவர்கள் போகாததற்கு என்ன காரணம்?” என்றார். ”அதை விக்னேஸ்வரனே கூறியிருக்கிறாரே, சிறீதரனுக்கு வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் கூட்டம் இருந்ததால், விருப்பம் 2

## பிறந்தது சித்திரைப் புத்தாண்டு

சித்திரைப் புத்தாண்டு நேற்றிரவு பிறந்தது. சைவ ஆலயங்களில் புத்தாண்டையொட்டி விசேட வழிபாடுகள், பூசைகள் இடம்பெற்றன. புத்தாண்டு இன்று கொண்டாடப்பட்டாலும் பஞ்சாங்கக் கணிப்புக்களின்படி இரவு 8.15 மணிக்கே பிறந்தது.

தமிழ், சிங்கள மக்களால் கொண்டாடப்படும் இந்தப் புத்தாண்டு ஸ்ரீ குரோதி வருடம் என அழைக்கப்படுகிறது.

ஏப்ரல் 14 ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை சஷ்டி திதியில் திருவாதிரை நட்சத்திரம் கூடிய சிறப்பான நேரத்தில் மிதுன ராசி அதிகண்ட யோகத்தில் புதிய வருடத்தின் முதல் நாள் தொடங்குகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.57 மணி முதல் 9.56 மணிவரையுள்ள நல்ல நேரத்திலும். காலை 9.59 மணி முதல் நண்பகல் 12.01 மணி வரையான நேரத்திலும் புத்தாண்டுக் கைவிசேடங்கள் வழங்கப்படலாம். மாலை 6.17 மணி முதல் இரவு 08.17 மணி வரையும்கூட கைவிசேடம் வழங்கப்படலாம். புத்தாண்டுப் புது வியாபாரங்களை ஆரம்பிக்க 2

## தமிழ் பொது வேட்பாளரை தடுக்க சுமந்திரன் எம்.பி. சதி செய்கிறாராம்

### சபா குதாஸின் கண்டுபிடிப்பு இது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரைக் களமிறக்குவதற்கு எதிராக தமிழ்அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றவர்கள் சதிசெய்கிறார்கள் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரான ரெலோவைச் சேர்ந்த சபா குகதாஸ் குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களம் இறக்குவதற்கு தாயகத்திலும் புலம்பெயர் தமிழர்களிடையேயும் ஆதரவு அதிகரித்து வருகிறது. அதனைக் குழப்புவதற்குப் பல தரப்பின் நிகழ்ச்சி நிரல்களில் தமிழ்த் தரப்பில் சிலர் சதி முயற்சியில் இறங்கியுள்ளனர்.

ஆளும் தரப்புடன் இணைந்துள்ள தமிழ் முகவர்கள், வழமை போன்று ஆளும் தரப்புக்குச் சார்பாக, பொது வேட்பாளர் விவகாரத்தை விமர்சிக்கின்றனர். தமிழ்த் தேசியக் கட்சிகளில் இருப்பவர்களும் வேறு சிலரும் கூட மறைமுகமாக அரசினதும் வெளிச் சக்திகளினதும் 2

## தேர்தலில் வாக்குகளை பெறுவதற்காக கச்சதீவை மீட்பதாகப் பேசுகின்றார்கள்

### வடக்கு மீனவர் இணைய தலைவர் குத்திக்காட்டு

இந்தியாவில் நடக்க இருக்கின்ற பொதுத்தேர்தலில் தமிழ்நாட்டு மீனவர்களின் வாக்கு வங்கியை இலக்கு வைத்தே கச்ச தீவை மீட்டுத் தருகிறோம் என அரசியல்வாதிகள் அங்கு பரப்புரைகளில் சவால் விட்டு வருகின்றனர் என வட மாகாண மீனவர் இணையத்தின் தலைவர் என். வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்..

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இழுவைமடி தொழிலை தடை செய்யவேண்டும், இந்திய கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த வேண்டும் என நீண்ட காலமாக நாங்கள் போராடி வருகின்றோம்.

எமது போராட்டங்களுக்கு தீர்வுகள் கிடைக்காத நிலையில் கச்ச தீவு தொடர்பில் இந்தியாவில் பேச்சுக்கள் எழுந்துள்ளன. ஆனால், கச்ச தீவு எங்களுடையது. அது இலங்கைக்குச் சொந்தமானது தெரிந்ததும் கச்ச தீவை இந்தியா இலங்கைக்குக் கொடுத்ததாக கூறி தற்போது பரப்புரை செய்து வருகின்றனர்.

கச்சதீவு கடலை அண்டிய பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழ்நாடு கடற்தொழிலாளர்களை இலங்கை கடற்படையினர் விரட்டி அடித்தமையால், தமிழ்நாடு கடற்தொழிலாளர்கள் கோவம் கொண்டிருந்தனர். அவ்வேளை அவர்களின் கோவத்தை கட்டுப்படுத்தவே, கச்சதீவில் தமிழ்நாடு கடற்தொழிலாளர்கள் தமது வலைகளை உலர்த்தவும் , ஒய்வு 2

### போலிக் கடவுச் சீட்டில் பயணிக்க முயற்சித்த

## இலங்கைத் தம்பதியர் சென்னையில் கைது

இலங்கைத் தம்பதியர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். போலிக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி அவர்கள் இருவரும் இலங்கைக்குச் செல்ல முயன்றனர் என்று அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஏப்ரல் 11 இரவு கொழும்பு வரவிருந்த விமானத்தில் பயணிக்கவிருந்த சமயத்திலேயே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெரம்பலூரை சேர்ந்த ராமச்சந்திரன் அவரது மனைவி ஹனிஷா ஆகியோரின் கடவுச்சீட்டை சோதனை செய்தபோது, இருவரும் போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி பயணம் செய்தது தெரியவந்தது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

விசாரணையில், இருவரும் இலங்கையை சேர்ந்தவர்கள் என்பதும், கடந்த சில ஆண்டுகளாக பெரம்பலூரில் தங்கி ரேஷன் அட்டை மற்றும் பிற இந்திய ஆவணங்களைப் போலியாகப் பெற்றிருப்பதையும் 2

## சஜித், அனுரவின் பட்டப்படிப்பு தகுதியை வெளிப்படுத்த முடியுமா?

### நவீன் திஸநாயக்க கேள்வி

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க ஆகியோரின் பட்டப்படிப்புத் தகுதியைப் பகிரங்கப்படுத்த முடியுமா என்று சப்பிரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க கேள்வ எழுப்பியுள்ளார். .

சப்ரகமுக மாகாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்குதெரிவித்ததாவது:

நாம் அரச சேவையில் ஊழியர்களை இணைத்துக்கொள்ளும்போது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டப்படிப்பு ஆவணத்தையே ஆகக்குறைந்த தகமையாகக் கொள்கன்றோம்.

ஆகவே நாடொன்றை ஆளும் பதவிக்கு வரும் நபரும் ஆகக்குறைந்தது பட்டப்படிப்பு ஆவணமொன்றை 8

## சஜித் – அனுர விவாதம் நடந்தால் தேசிய மக்கள் சக்தி பிளவுறும்

### நளின் பண்டார எம்.பி. தெரிவிப்பு

நாட்டின் பொருளாதார நிலைமைகள் சம்பந்தமாக சஜித், அநுர இடையே விவாதம் நடைபெறுமாக இருந்தால் தேசிய மக்கள் இரண்டாக பிளவுபடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித் 2

## கோழைகள் போன்று புரட்சித் தலைவர்கள் விவாதத்துக்கு அழைத்தால் தப்பி ஓடக்கூடாது

### சஜித் ஜேவிபிக்குக் கிண்டல்

பொருளாதார கொள்கைகள் தொடர்பில் விவாதத்துக்கு அழைக்கும்போது, கோழைகள் போன்று புரட்சித் தலைவர்கள் தப்பித்து ஓடக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின்கீழ், 154ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் 2

## தேசிய தரத்திலான வீரர்களை உருவாக்க முறையான பொறிமுறை ஒன்று அவசியம்

### அமைச்சரிடம் விளையாட்டுத் துறையினர் வலியுறுத்து

யாழ். மாவட்ட விளையாட்டு துறையில் தேசிய தரத்திலான தகுதியுடன் வீரர்களை உருவாக்குவதற்கான முறையான பொறிமுறை ஒன்று உருவாக்கப்படுவது அவசியம், அத்தகைய பொறிமுறை இல்லாமையால் யாழ். மாவட்டத்தின் விளையாட்டு துறை தரத்தில் முன்னேற்றம் காணமுடியாதுள்ளதாக விளையாட்டுத் துறைசார்ந்தோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சுட்டிக்காட்டினர்.

இந்தப் பிரச்சினைக்குத் துரிதமாகத் தீர்வுகாணப்படுவதன் அவசியம் தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நேற்று யாழ் 8

## விவாதத்துக்கு வரமுடியாது நழுவிஓடியது ஐ.ம.சக்தியே

### ஜே.வி.பி. நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

நாங்கள் விவாதத்துக்கு தயாராகவே உள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தியே நழுவிச் சென்றது என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னா ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

இருந்தும் அவரால் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லை, செல்வம் அடைக்கலநாதன் வெளிநாடு சென்றுவிட்டார், சுரேஸ் மட்டும்தான் வருவதாகச் சொல்லிவிட்டு வரவில்லை என்று கூறினாரே! என்னுடைய பத்தியில் அதைக் குறிப்பிட்டிருந்தேனே'' என்றேன் நான். ''சோத்துக்குள் மறைச்சாலும் முழுப் பூசனிக்காய் வெளிய தெரியத்தானே செய்யும்'' என்றார் அவர்.

''சரி! உங்கள் பிரச்சினைதான் என்ன?'' என்றேன் அவரிடம். பொரிந்து தள்ளிவிட்டார்.

''ஒற்றுமைஒற்றுமைஎன்பார்கள். பிறகு யார்தலைமையில் ஒற்றுமை என்பதில் முரண்படுவார்கள். இதுதான் காலம்காலமாக நடக்கிறது. இதுதான் கூட்டமைப்புக்குள்ளும் நடந்தது. இவர்களுக்குள் இருப்பது தலைமைப்போட்டி. அதை இவர்கள் ஒருநாளும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். அப்படிவிட்டுக்கொடுக்க முடியாததால்தான் ஆளுக்கொரு கட்சி வைத்துக்கொண்டு நாங்களும் தலைவர்தான் என்று சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தேர்தல் என்று வந்துவிட்டால் ஒற்றுமை, தமிழ்த் தேசியம் என்று பேசிக்கொண்டு தமிழர்களின் தலைகளில் மிளகாய் அரைக்க வந்துவிடுவார்கள்.

நீங்கள் பத்திரிகையாளர்கள் அவர்களின் போலி ஒற்றுமையையும் வாக்குத் தமிழ்த் தேசியத்தையும் தூக்கிப் பிடித்து மக்களின் மண்டையைக் கழுவி அவர்களுக்காக வாக்குப் பிச்சை எடுப்பீர்கள்.தேர்தல் முடிந்ததும் அவர்களுக்குள் அரசியல் தீர்வு குறித்துக்கூட ஒரு கருத்தொற்றுமை இருக்காது. ஆளுக்கொரு தீர்வுக்குப் பின்னால் ஓடுவார்கள். எல்லாரும் சமஷ்டி என்பார்கள். ஆனால் அதை அடைவதற்கு அவர்களிடம் ஒரு திட்டமும் இருக்காது. அப்படித் தங்களிடம் ஒரு திட்டமும் கிடையாது என்று சொல்கிற துணிவாவது விக்னேஸ்வரன் ஐயாவுக்கு இருக்கிறது. மற்றவர்களிடம் அந்த அரசியல் நேர்மையும்கூட இல்லை. ஆனால், அவர்களிடமும் சமஷ்டியை அடைவதற்கான எந்தத் திட்டமும் கிடையாது என்பதுதான் உண்மை.

இப்போது அவர்கள் பொது வேட்பாளர் என்பதுகூட மக்களை ஏமாற்றும் வேலைதான். கடந்த காலங்களில் அவர்களால் ஏற்று வடக்குகிழக்கில் விற்பனை செய்யப் பட்ட ரணிலையோ சஜித்தையோ மீண்டும் தமிழ் மக்களிடம் விற்கமுடியாது. ஜேவிபியினருடன் இவர்களுக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. அதனால் இன்றுள்ள வேட்பாளர்களில் எவரையும் இவர்களால் மக்களிடம் விற்க முடியாது, அல்லது அப்படி விற்கச் சென்றால் மக்கள் கிழி கிழி என்று கிழித்துத் தொங்கவிட்டுவிடுவார்கள் என்கிற அச்சத்தில்தான் இப்போது பொது வேட்பாளர் என்கிற புதிய முலாம் பூசப்பட்ட பழையசரக்கைக்கொண்டு வருகிறார்கள்.

இவர்கள் கூறும் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களித்தாலும்கூட இரண்டாவது தெரிவு ஒன்றை யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்குத்தான் போடச் சொல்லப் போகிறார்கள். அப்படியில்லாவிட்டால் அந்த விருப்பு வாக்கை தமிழர்கள் யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்குத்தான் போடப்போகிறார்கள். ஆக, இவர்கள் சொல்வதெல்லாம் சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கு நேரடியாக ஆதரவு தெரிவிக்காதீர்கள் மறைமுகமாக ஆதரவு தெரிவியுங்கள் என்பதுதான். அப்படிச் செய்தால்தான் அடுத்த பொதுத் தேர்தலில் நாங்கள் சிங்களவர்களுக்கு எதிராக நின்று அவர்களைக் குலைநடுங்க வைத்தோம் என்று வீராவேசப் பேச்சுக்கள் பேசிக்கொண்டும், ஒற்றுமை என்று ஏமாற்றிக்கொண்டும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சூறையாட முடியும்.

நீங்களும் (பத்திரிகையாளர்கள்) வெட்கமே இல்லாமல், தமிழ்த் தலைவர்கள் சூளுரைத்தார்கள், கொதித்தார்கள், இடித்துரைத்தார்கள், ஆவேசப்பட்டார்கள் என்று விதம் விதமாகத் தலைப்புப் போட்டு சனங்களைஉசுப்பேத்திவிடுவீர்கள். உங்களைப் போன்ற ஆட்கள் இருக்கும் வரைக்கும் அவர்களுக்கு என்ன கவலை, இன்னும் 5--0 வருசமானாலும் சனங்களை ஏமாற்றிக்கொண்டிருப்பார்கள்'' என்று சரமாரியாகக் கொட்டித் தீர்த்தார்.

குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்த நான், ''இப்ப இருக்கும் அரசியல் தலைவர்களைவிட்டுவிட்டு தேர்தல்களை எதிர்கொள்ள வேறு ஏதாவது தெரிவுகள் உங்களிடம் இருக்கிறதா? இருந்தால் சொல் லுங்கோ அதைப் பற்றியும் செய்தி போடலாம்'' என்றேன்.

உங்களையெல்லாம் திருத் தவே முடியாது. எக்கேடாவது கெட்டுத் துலையுங்கோ என்று திட்டிக்கொண்டே அழைப்பைத் துண்டித்துவிட்டார், பாவம்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார ரீதியில் முன்னேற றக்கூடிய தலைமைத்துவ ஆளுமையும் அவரிடம் உள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத் தில் பல்வேறு அமைப்புகள் மற்றும் துறைசார்நடைபெற்றமக்களுடனான கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட உள்ளார். அவரே மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு அதற்குப் பல காரணங்கள் உண்டு.

அரசியல் ரீதியில் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கான தீர்வினை முன்வைக்க மாட்டார் அவரை எவ்வாறு நம்புவது என சிலர் சிந்திக்கின்றனர். ரணிலை நம்பாவிட்டால் பரவாயில்லை, என்னை நம்புங்கள்; நான் செய்விப்பேன் என்று கூறுகின்றேன்.

மக்களின் பிரச்சினைகளை தீரா பிரச்சனையாக கொண்டு செல்லும் அரசியல்வாதியாக நான் ஒருபோதும் இருக்கப்போவதில்லை. இருந்ததும் கிடையாது. மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.

இதேவேளை பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றாக அழிக்கலாம் என பலர் நம்பபியிருக்கவில்லை. ஆனால் நான் நம்பியிருந்தேன். அது நடந்து நாடும் அமைதி நிலைக்கு வந்துவிட்டது.

அதுபோன்றுதான் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை தீர்வுக்கான ஆரம்ப புள்ளியெனவும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்திவந்திருந்தேன். அதை அன்று பலர் கடுமையாக எதிர்த்தனர். ஆனால் இன்று அது கிடைத்தாலே போதும் என்று அவர்களே முணுமணுக்கத் தொடங்கியுள்ளனர்.

ஆகவேதான் நான் மக்களுக்கு ஒன்றைக் கூறுகிறேன். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து வாக்குகளால் தமிழ் மக்களின் பலத்தை காட்டுங்கள். மக்களுக்கான தீர்வினை நான் பெற்றுத் தருவேன் என்றார்.

## பிறந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரும்புவோர் நாளை திங்கட்கிழமை காலை 9.08 மணி முதல் 9.51 மணி வரையும் அல்லது காலை 9.55 மணி முதல் 10.30 மணி வரையும் உள்ள சுப நேரத்தில் தொடங்கலாம்.

## விவாதத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் விவாதத்துக்கு தயார் என்று பதிலளித்துவிட்டோம். அதற்காக கடந்த பத்தாம் திகதி தினமும் நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் குறித்த விவாதம் ஆரம்பிப்பதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்னதாக தம்மால் ஒதுக்கப்பட்ட நேரத்தில் பங்கேற்க முடியாது என்று என்று நளின்பண்டார எனக்கு அறிவித்தார்.

அகவே ஐக்கிய மக்கள் சக்தியும், அதன் தலைவரும் வெள;வேறு இடங்களில் பல்வேறு கதைகளைக் கூறினாலும் அவர்களுக்கு விவாதத்துக்கு வருவதற்கு தயாரற்ற மனநிலைமை தான் காணப்படுகின்றது என்றார்.

## இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

சமீபத்தில் அவர்கள் இலங்கை செல்ல முடிவு செய்து பெரம்பலூர் முகவரியில் போலி கடவுச்சீட்டு ஒன்றையும் பெற்றுள்ளனர்.

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கவும் அனுமதிக்குமாறு இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி அதற்கான அனுமதியைப் பெற்றது.

நேரு காலத்திலேயே இந்தியா கச்சதீவைப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டது. ''கச்சதீவு ஒரு சிறிய தீவு. அது பற்றி நாம் நாடாளுமன்றில் பேச வேண்டிய அவசியமில்லை'' என்று நேருவே கூறியிருந்தார். ஆனால் இப்போது கச்சதீவு பேசு பொருளாக மாறியுள்ளது. கச்சதீவை மீட்டுதருவோம் என தேர்தலுக்காகச் சாவல் விடுகின்றனர்.

இந்திய மத்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் தெரியும் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என. தமிழ்நாட்டில் குறிப்பாக இராமேஸ்வர பகுதிகளை அண்டிய பகுதியில் உள்ள கடற்தொழிலாளர்களின் வாக்கு வங்கிக்காக கச்சதீவை மீட்பது பற்றிப் பேசிகின்றார்கள்.

கச்சதீவை மீட்டால் மீனவர்கள் பிரச்சனை தீரும் என்கிறார்கள். ஆனால் பிரச்சனை அவர்களின் அடிமடி இழுவைப் படகுகளும், இலங்கை கடற்பரப்பினுள் அவர்கள் அத்துமீறி நுழைவதுமே தவிர, கச்சதீவு அல்ல. அதனைத் தடுத்து நிறுத்தினால்தான் பிரச்சினை தீருமே தவிர, கச்சதீவை மீட்பதால் பிரச்சனை தீராது என தெரிவித்தார்.

## சஜித் - ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் பொருளாதாரக் குழுக்களுக்கு இடையிலும், சஜித் பிரேமதாச, அநுரகுமார இடையிலும் விவாதத் துக்கான அழைப்பினை நானே முதலில் கோரினேன்.

எட்டுக்கும் மேற்பட்ட தடவைகள் இந்தக் கோரிக்கையை பகிரங்கமாகவே விடுத்துள்ளேன். அத்தகைய தருணங்களில் எழுத்துமூலமான கோரிக்கையை அவர்கள் கோரினார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்திக்கு எழுத்துமூல மான அறிக்கையையும் வழங்கி யுள்ளது. ஆனால் தற்போது விவாதத்தினைக் கண்டு ஒழிந்து கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களால் விவாதத்துக்கு தயார் என்றால் நாளொன்றை ஒதுக்கீடு செய்து நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது மட்டும் தான் எஞ்சியுள்ள பணியாக உள்ளது. ஆனால் அவர்கள் அதற்கு தயாரில்;லை.

இதற்கு காரணம், தேசிய மக்கள் சக்திக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் விவாதம் நடைபெற்றால் தேசிய மக்கள் சக்தி இரண்டாக பிளவுபடும்.

அந்த அச்சத்தின் காரணமாகவே அவர்கள் விவாதத்திலிருந்து நழுவிச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். இதில் மறைப்பதற்கு எதுவுமே இல்லை ஆகவே மீண்டும் நான் அவர்களை அழைக்கின்றேன் விவாதத்துக்கு வாருங்கள். நாங்கள் தயாராகவே உள்ளோம் என்றார்.

## கோழைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகுப்பறை உபகரணங்கள், மொனராகலை, வெல்லவாய, தனமல்வில, கெத்சிரிகம கனிஷ்ட வித்தியலாயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கல்லூரியின் நடனம், வாத்தியம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஒரு இலட்சம் ரூபா நிதியையும் நன்கொடையாக வழங்கி வைத்தார். மேலும், கல்லூரியில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் வனஜீவி அதிகாரி ஒருவரின் பிள்ளைக்கு மடிக்கணினி ஒன்றினையும் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

சர்வதேச சமூகத்தின் தலைவர்கள் சந்திக்கும் போது தனிப்பட்ட சந்திப்புகள் கூட நடக்கின்றன. மொழித்திறன் இல்லை என்றால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது. இவ்வாறான திறமை இல்லாதவர்களுக்கு நாட்டின் தலைமைத்துவத்தை வழங்குவது மீண்டும் பாதாளத்தில் விழுவதை போன்றதாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டிற்கு உண்மையை வெளிப்படுத்தக்கூடிய சரியான சுட்டி, தூரநோக்கு, பயணமும் கொண்டவர் யார், அந்த பயணத்தை ஒரு வேலைத் திட்டமாக மாற்றி இந்நாட்டில் நடைமுறைப்படுத்த முடியுமானவர் யார் என்பது குறித்து விவாதம் நடத்த தான் எந்நேரத்திலும் தயாராக இருக்கின்றேன்.

இவ்வாறான விவாதங்களில் இருந்து தப்பி ஓட வேண்டாம். பொருளாதார நெருக்கடி தொடர்பில் தனது பொருளாதார கொள்கை வகுப்பாக்க குழுவினரோடு மாற்று அணியின் பொருளாதார குழுக்களையும் ஒன்றிணைத்து விவாதம் நடத்துவோம் என நாகரீமகாக அழைக்கும் போது, கோழைகள் போன்று விவாதங்களில் இருந்து தப்பி ஓட வேண்டாம் என புரட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுகின்றேன்.

நாடு வங்குரோத்தியுள்ள வேளையில், நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை மக்கள் ஆணையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிலிருந்து எவராலும் தப்ப முடியாது என்றும், உலகில் உள்ள குறைந்த வளங்களை நாட்டுத் தலைவரின் சாமர்த்தியத்துடன் நமது நாட்டுக்கு எடுத்து வர வேண்டும். விவாதங்களும், வாதங்களும், தர்க்கங்களும், கலந்துரையாடல்களும் நடக்க வேண்டும். முன்மொழிவுகள், பார்வைகள் மற்றும் வேலைத்திட்டங்களை முன்வைக்காமல் அவ்வாறான வளங்களைப் பெற முடியாது என்றார்.

## தமிழ் பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகவர்களாக மாறி பொது வேட்பாளருக்கு எதிரான கருத்துக்களை ஊடகப் பரப்பில் முன் வைத்து வருகின்றனர்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், பொது வேட்பாளர் விடயத்தில் ராஜபக்சக்கள் பின்னணியில் இருக்கின்றனர் என்று சந்தேகம் வெளியிட்டார். இவரைப் போன்ற ஒரு சிலர் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களிடையே ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு முன்பாக உரியவர்களின் அனுமதி இன்றி வேட்பாளர்களின் பெயர்களை அறிவிப்பது போன்ற சதிகளில் குதித்துள்ளனர்.

தமிழர் தரப்பு எவ்வகையான தீர்மானங்களை எடுத்தாலும் அதனை தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதம், இனவாதமாகவும் பிரிவினைவாதமாகவும் பார்க்கும் என்பதற்காக ஒற்றுமையாக வெளிப்படுத்தும் ஜனநாயக முடிவை எடுக்காதிருக்க முடியாது. அதற்கான சந்தர்ப்பத்தை தவற விட முடியாது. விமர்சனங்கள், சதிகளை கடந்து அனைவரும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயம் - என்றார்.




# சந்திரிகாவின் மகுடிக்கு ஆடும் விக்கினேஸ்வரன்

## ஈ.பி.டி.பி சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டு

வடக்கின் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் சிறீலங்கா சதந்திர கட்சியின் முகவராக செயற்படுகின்றாரா என்ற சந்தேகம் எழுகின்றது எனத் தெரிவித்துள்ள ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் ஜனாதிபதி தேர்தல் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பான அவரது தற்போதைய நிலைப்பாடு அதை உறுதி செய்வது போன்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.




யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு இவ்வாறு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளரை ஒரு பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்கின்ற கோரிக்கை முன்னெடுத்த வடக்கின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தற்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விரும்புகின்ற வேட்பாளர்கள் எழுத்து மூலமாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் தமிழ் மக்களுக்கு என்னென்ன விடயங்களை செயல்படுத்துவீர்கள் என்பதை சர்வதேச ராஜதந்திரிகள் முன்னிலையில் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் ராஜதந்திரிகள் முன்னிலையில் எழுத்து மூலம் தருமாறு கூறிருக்கின்றார்.

முன்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பொது வேட்பாளர் தேவை இல்லை என்று கூறியிருந்தார். இதற்கு அரசாங்க செலவில் அவர்களது தயவில் வாழ்கின்றவர் அப்படித்தான் சொல்வார் என்று சம்பந்தரை கிண்டலும் கேலியும் செய்திருந்தார் இந்த விக்னேஸ்வரன்.

இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த விக்னேஸ்வரன் அன்று ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா அம்மையார் 2000 ஆம் ஆண்டு கொண்டுவந்த விடயங்கள் நல்ல விடயங்கள் என்றும் அதிலே பல சிறந்த விடயங்கள் இருக்கின்றன என்றும் சொல்லி இருக்கின்றார்.

இதிலிருந்து இவர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினுடைய குறிப்பாக சந்திரிகா அம்மையாரின் ஒரு முகவராக மாறியிருக்கிறாரா என்ற சந்தேகங்கள் எழுகின்றது.

இதேவேளை சர்வதேசத்தின் பங்களிப்புடன் புலிகளும் அன்றைய அரச ஆட்சியாளர்களும் இடையே 2002 இல் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். அதேபோன்று இந்நாட்டில் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அவை நடைமுறையாகாத வரலாறும் உள்ளன. இதேவேளை ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வடக்கின் அரியணையில் ஏறிய விக்னேஸ்வரன் ஆளுமை இன்மையால் தனது ஆட்சியில் இருந்து அமைச்சர்கள் செய்த மோசடிகளால் அவரது தலைமையிலான ஆட்சியை கலைப்பதற்காக அவைத் தலைவராலேயே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்ட வரலாறும் இருக்கின்றது.

அதுமட்டுமல்லாது ஆளுநர் சரியில்லை என்று கூறி தமக்கேற்ற ஆளுநரையும் கொண்டுவந்திருந்தார்கள். ஆனால் ஊழலையும் சபைக்காக வந்த பெரு நிதியை மீள அனுப்பியதையும் தவிர வேறொன்றையும் சாதித்திருக்கவில்லை.

பின்னர் கட்சியிலிருந்து வெளியேறி புது கூட்டுக்களை அமைத்து தனது சுயநலங்களை மேற்கொண்டுவருவதும் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறாக உறுதியான அரசியல் நிலைப்பாடில்லாத ஆளுமையற்ற விக்னேஸ்வரன் இப்போது சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டில் இருந்து ஜனாதிபதி வேட்பாளர் கதையை கூறியிருப்பது மக்களுக்கு மேலும் அழிவுகளையே கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தகக்கது. (05)

# அரசியலுரிமை விடயத்தில் நம்புங்கள் நாங்கள் உறுதிமொழி தருகின்றோம்

## ஈ.பி.டி.பி. ஊடக பேச்சாளர் தெரிவிப்பு

அரசியல் உரிமை பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தர எம்மால் முடியும். அதேவேளை இருக்கின்ற அதிகாரங்களை செயற்படுத்தி மேலும் அதிகாரங்களை பெற்று அவற்றை நடைமுறைப்படுத்த முடியும் என்பதிலும் நாம் தெளிவாகவே இருக்கின்றோம் என தெரிவித்த ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன், அதனால்தான் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கையில் மக்களாகிய நீங்கள் எங்கள் பின்னால் அணி திரளுங்கள் நாங்கள் உறுதிமொழி தருகின்றோம் என எமது கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிவருகின்றார் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரம சிங்கவை ஆதரிக்குமாறு கூறிவருகின்றார். ஜனாதிபதியாக மீண்டும் ரணில் விக்ரமசிங்க வருவதற்கு தமிழ் மக்கள் ஆணை வழங்கினால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியிருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

கடந்த காலத்தில் அதாவது இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதுக்கு முன்னர் வடமராட்சி யில் ஆபரேஷன் லிபரேசன் என்னும் இராணுவ நடவடிக்கை நடந்தபோது இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் ராமச்சந்திரன் என்ற எம். ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தார். அதேபோன்று மத்தியில் ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தார்.

அன்று வடமராட்சி பிரதேசத்தில் முழுமையாக இராணுவம் கைப்பற்றியதன் பின்னர் தொடர்ச்சியாக இராணுவம் ஏனைய இடங்களையும் கைப்பற்ற முனைந்தது. இதனால் எமது அரசியல் உரிமை அடியோடு அற்றுப்போகும் என்ற நிலைப்பாடு உருவானது. இந்நிலையில் வடமராட்சி பிரதேச மக்களுக்கான உணவுப் பொருள்களை இந்திய கடற்படை கப்பல்கள் கொண்டு வந்தன. இலங்கை கடற்படை அவற்றைத் திருப்பி அனுப்பியது.

ஆனால் இந்திய அரசு ஒதுங்கியிருக்கவில்லை. இந்தியாவின் மிராஜ் விமானங்கள் தாம்பரம் மீனம்பாக்கம் போன்ற பகுதியில் இருந்து புறப்பட்டு இலங்கையின் வடக்கே வடமராட்சி பிரதேசத்தில் மட்டுமல்லாது குடாநாடெங்கும் உணவுப் பொட்டலங்களை வீசியதுடன் இலங்கை அரசுக்கும் ஒரு வலுவான செய்தியை சொல்லி சென்றது.

அதாவது தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டால் இந்தியா பார்த்துக் கொண்டிருக்கமாட்டாது. என்ற வலுவான செய்தியை தென்னிலங்கை இனவாத அரசுக்கு சொல்லிச் சென்றது அதன் பின்னர்தான் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவானது.

இவை அனைத்தும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில்தான் நடந்தேறின. அதன் வரலாற்று அனுபவங்களைக் கொண்டே நாம் சொல்கின்றோம் தற்போதைய ஜனாதிபதி ரணில் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் எம்மால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத்தர முடியும். அவர் அதை முன்னெடுப்பார். அதாவது எமது மக்களிடம் எமது கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி சொல்வார் நீங்கள் ரணிலை நம்பவோ அல்லது நம்ப முடியாதென்ற நிலைப்பாட்டிலோ சிந்திக்க வேண்டியதில்லை.

என்னை நம்புங்கள். என்னிடம் உங்கள் அரசியல் அதிகாரத்தை தாருங்கள். நான் மக்களது அடிப்படை பிரச்சினைகள் மட்டுமல்லாது அரசியல் உரிமை பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வை பெற்றுத்தருவேன் என்று. அமைச்சரது இந்த உறுதியான நம்பிக்கைக்கு மக்கள் செவிசாய்த்தால் நிச்சயம் அனைத்து பிரச்சினைகளுக்குமான தீர்வுகளும் கிடைத்தே தீரும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சித்திரைத் திருநாள் சிறப்பாக மலர்கிறதே !




தைமகள் வந்தாள் தழுவியே நின்றாள்
கைநிறைய அள்ளித் தந்துமே நின்றாள்
தெய்வீகம் நிறைந்தது தெளிவுமே தந்தாள்
தித்திப்பாய் பொங்கலை ஆக்கியே நின்றாள்

என்பின்னே சித்திரை வருகிறாள் என்றாள்
ஏற்றபல உங்களுக்கு அளித்திடுவாள் என்றாள்
தைமகளின் வார்த்தை தடவியே கொடுத்தது
தளர்வகன்று சித்திரயை வரவேற்க நின்றோம்

சித்திரை என்றதும் நித்திரையே ஓடிவிடும்
புத்துடுப்பு மத்தாப்பு புதுநினைப்பே எழுந்துவிடும்
கொண்டாட்டம் குதூகலம் கூடவே சேர்ந்துவிடும்
அத்தனையும் சித்திரைதான் அளிப்பதற்கு வந்துநிற்கும்

தைமகளே வருடத்தில் முதல்வந்து நின்றாலும்
சமயமது சித்திரையை முதல்மகளாய் ஆக்கிருக்கு
சித்திரையை முன்னிறுத்தி பஞ்சாங்கம் அமைகிறது
அத்தனையும் சித்திரையை அடியொற்றித் தொடர்கிறது

பஞ்சாங்கம் பார்ப்பதும் பலன்களை அறிவதும்
பலருக்கும் பெருவிருப்பாய் சித்திரையில் அமைந்திடுமே
பலன்பார்த்து பலன்பார்த்து பரவசத்தில் மிதப்பாரும்
பலன்சிறக்கா முழிப்பாரும் சித்திரையில் இணைந்திடுவார்

மருத்துநீர் என்பது சித்திரையின் சிறப்பாகும்
தலைக்கோர் இலையும் கால்களுக்கோர் இலையும்
வைத்ததன் மேல்நின்று மருத்துநீர் தலைவைத்து
நீராடும் வழக்கம் சித்திரையின் முக்கியமே

மூடப் பழக்கமென்று முகஞ்சுழிக்க வேண்டும்
முன்னோர்கள் சிந்தனையைப் பின்தள்ள வேண்டாம்
இயற்கை மருத்துவத்தை இணைக்கின்ற வண்ணம்
எல்லாமே அமைவதுதான் எம்முன்னோர் எண்ணம்

பருவ காலங்களை பண்டிகையோ டிணைத்து
வருகின்ற வகையிலே வழிவகுத்தார் முன்னோர்கள்
கருத்தூன்றிக் கவனித்தால் கருத்தாக அமையும்
கண்மூடிப் பார்த்திட்டால் கருத்தெல்லாம் சிதறும்

சீனிப்பலகாரம் தித்திக்கும் சோகிப் பலகாரம்
அச்சுமுறுக்கு அமர்களமாய் அருமைச் சுவையோடு
இல்லாரும் செய்வார் இருப்பார் கூடச்செய்வார்
எல்லாமே சித்திரையை இன்பமாய் ஆக்கிடுமே

கோவில்கள் எங்கும் கோலகலமா யிருக்கும்
வாயில்கள் தோறும் மக்களாய் நிரம்பிடுவர்
அபிஷேகம் அலங்காரம் ஆண்டவனைக் குளிர்விக்கும்
அடிபரவும் அடியாரை ஆண்டவனும் மகிழ்விப்பார்

சித்திரையில் தேரோட்டம் நடக்கின்ற கோவிலெல்லாம்
திரண்டடியார் சென்றுமே தேர்வடத்தைப் பிடித்திழுப்பார்
தேர்வடத்தைப் பிடித்திட்டால் செய்தவினை அகலுமென்று
நம்பிக்கை மனதிலெழ வடம்பிடித்து மனம்நிறைவார்

சித்திரையைச் சிறப்பிக்க முத்தமிழே முன்னிற்கும்
பட்டிமன்றம் பாட்டுமன்றம் பலவுரைகள் நிகழ்ந்திடுமே
ஆடலொடு பாடலும் ஆனந்தம் அளித்திடுமே
அங்குமே சித்திரையும் முத்திரையாய் ஜொலித்திடுமே

ஆன்மீகம் இருக்கும் அழகுக்கலை இருக்கும்
அறிவியலும் இருக்கும் ஆசாரமும் இருக்கும்
அனைத்தையும் உள்ளடக்கி அமைகின்ற திருநாளாய்
சித்திரைத் திருநாள் சிறப்பாக மலர்கிறதே

கருத்துடைய சித்திரையை களிப்புடனே பார்ப்போம்
கைகோர்த்து அனைவருமே களிப்புற்று நிற்போம்
கையணைத்து உறவுகளைக் களிப்படைச் செய்வோம்
கற்கண்டாய் சர்க்கரையாய் களிசொற்கள் பகிர்வோம்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொருளாதார மீட்சியை தொடர்வதன் அவசியம்

ஆசியஅபிவிருத்திவங்கியின்(ADB)வருடாந்தமுதன்மையான பொருளாதார வெளியீடான ஆசிய அபிவிருத்திக் கண்ணோட்டம் (ADO) ஏப்ரல் 2024 வெளியாகியுள்ளது. அதில் இலங்கையின் பொருளாதாரம் குறித்தும் காத்திரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கை 2024 இல் 1.9% மற்றும் 2025 இல் 2.5% என்ற மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்யும் என ஆசிய அபிவிருத்திக் கண்ணோட்டம் கணித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும்கூறிவரும்கருத்துக்களுக்கு இணக்கமாகவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் கருத்துக்களும் இருக்கின்றன.

2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் இலங்கையின் பொருளாதாரம் மீட்சிப் பாதைக்குத் திரும்புவதற்கான முகிழ் நிலை காணப்பட்ட நிலையில் தற்போது அது மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டத் தொடங்கியிருக்கிறது என்பது ஆசிய அபிவிருத்தி வங்கியின் கணிப்பு.

பணவீக்கம் ஒற்றை இலக்கமாக குறைந்துள்ளது, அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்ந்து அதிகரித்து வருகின்றது, நாணய மாற்று விகிதம் (ரூபாயின் பெறுமதி) உயர்ந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் பணம் அனுப்புதல் ஆகியவை தொடர்ந்து பாராட்டத்தக்க உயர்ச்சியைக் காட்டுகின்றன என்பவற்றின் அடிப்படையில் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையின் பொருளாதாரம் மீட்சித் தடத்திற்குத் திரும்பியுள்ளதாகக் கூறுகின்றது.

அதேநேரம், வரவிருக்கின்ற தேர்தல்கள் இந்த நிலமையை, அதாவது பொருளாதார மீட்சிக்கான இலங்கையின் திரும்புதலைப் பாதிக்காத வகையில் அமையவேண்டும் என்கிற தனது கவலையையும் ஆசிய அபிவிருத்தி வங்கி தனது கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளது. தேர்தல்களில் தற்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஆதரவு அரசியல் தரப்புக்களும் தோல்வியடைந்தால் பொருளதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் கைவிடப்படுமா என்கிற சந்தேகமே இந்தக் கவலைகளுக்கான காரணம் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

அரசுத் தலைவர் ரணிலின் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளை, குறிப்பாக அவர் பன்னாட்டு நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை தாம் ஆட்சிக்கு வந்தால் மீளாய்வு செய்வோம், அதன் நிபந்தனைகளை மாற்றியமைப்போம் என்றெல்லாம் தலைமை எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஆட்சி அதிகாரத்தை எதிர்காலத்தில் கைப்பற்றும் வாய்ப்புக்கள் இருப்பதாகக் கருதப்படும் ஜேவிபியும் கூறிவருவதன் காரணமாகவே இந்தச் சந்தேகங்கள், கவலைகள், பொருளாதாரத்தின் நிலையான மீட்சி தொடர்பான நிலையற்ற தன்மைகள் தோன்றுகின்றன.

அரசியல்வாதிகள் கடந்த காலங்களிலும் இதுபோன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளைக் கடந்த காலங்களிலும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் பொருளாதார விடயங்களில் தமது அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப முடிவெடுத்து முடிவெடுத்துத்தான் இப்படி நாட்டைக் குற்றுயிரும் குலையுயிருமாக்கி இருக்கின்றார்கள். பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரசியல்வாதிகளின் பொ–றுப்பற்ற அந்தப் போக்கு இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை என்பதையே ஆசிய அபிவிருத்தி வங்கியின் கவலைகளும் சுட்டிநிற்கின்றன.

எனவே, பொருளாதார மறுசீரமைப்பு விடயத்தில் மக்களைப் பாதிக்கும் முடிவுகளுக்குச் செல்லமாட்டோம் என்பதையும் பொருளதார மீட்சிக்குப் பாதகமாகச் செயற்படமாட்டோம் என்பதையும்தேர்தலுக்குமுன்பானஉறுதிமொழியாகஅனைத்துக் கட்சிகளும் வழங்கவேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குச் சீரமைப்பு இன்னும் அவசியம் எனக் கருதின், அதனைப்பொதுவெளியில்முன்வைத்துபொருளாதாரத் துறைசார் அமைப்புக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படவேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே ஆட்சி மாற்றத்தின் பின்னரும் பொருளாதார மீட்சியைத் தக்கவைக்க முடியும்.

ஆட்சி மாற்றத்தால் என்ன நிகழுமோ என்கிற சந்தேகம் முதலீடுகளைத் தாமதப்படுத்துவதுடன் பொருளாதார வளர்ச்சியையும் நிச்சயம் பாதிக்கும். அரசியல் தலைவர்கள் அதனை உணர்ந்துகொண்டு செயற்பட முன்வரவேண்டும்.

# சித்திரைத் திருநாளைச் சிந்தையில் வைப்போம்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.



கொண்டாட்டங்கள் - வாழ்விலே புத்துணர்வை ஏற்படுத்தி உற்சாகமாய் இருப்பதற்கு நல்ல தொரு வழி காட்டிகளாய் விளங்குகின்றன எனலாம். ஒவ்வொரு கொண்டாட்டங்களும் வரு கின்ற வேளை அதாவது வருவதற்கு முன்னும் வந்த நிலையிலும் வாழ்விலே ஒரு வசந்தம் வந்து அமைவதை காணமுடிகிறது எனலாம். ஆனந்தம் வருகிறது! அகமகிழ்வு வருகிறது! வீடும் நாடும் விடிவு பெற்றது போல ஒரு எண்ணங்கூட உதயமாகிறது எனலாம். அதனால் த்தான் ஆண்டுதோறும் கொண்டாட்டங்கள் அமைந்திருக்கின்றன. மாதத்தில் கொண்டாட் டம். வருஷத்தில் கொண்டாட்டம் என்று கொண்டாட்டங்கள் என்பது வாழ்விலே நிறைந்தே இருக்கிறது.நிறைந்தே இருக்கும் வண்ணம் சமூகக் கட்டமைப்பு வளர்ந்து வந்துள்ளது என் பதை மனமிருத்தல் அவசிய மானதேயாகும். அந்தவகையில் சித்திரைத் திருநாளைப் பற்றி எண்ணிப் பார்ப்பது பொருத்தமாய் இதுக்கு



மென்று எண்ணுகிறேன்.

சித்திரைத் திருநாளை தமிழர் திருநாள் என்பதா ? தைத் திருநாளை தமிழர் திருநாள் என் பதா ? என்று ஒரு போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டம் அரசியல் மயப்படுத்தப்பட்டு , அரசியல் கட்சிகளின் கொள்கையாக்கப்பட்டு அக்கட்சிகள் சார்பாக அறிஞர்கள் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தி பெரும் சர்ச்சையினை உருவாக்கி ஆட்சிகள் மாறும் வேளை காட்சிகள் மாறியதையும் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனாலும் பல ரும் சித்திரைத் திருநாளையே தமிழர்தம் திருநாளாகக் கொண்டாடி வருகிறார்கள் என்பதும் நோக்கத்தக்கதே. திருநாளினைக் கொண்டாடுவதன் நோக்கமே மனமகிழ்வும் மனநிறைவு மேயாகும். அதனை விட்டு விட்டு அங்கும் - வீண் தர்க்கமும் குதர்க்கமும் பேசி அங்கும் ஒரு பஞ்சாயத்தை அரங்கேற்றுவதும் பொருத்தமுடையதா ? சிந்தித்தால் தெளிவு வரும் அல்லவா ?

சித்திரை மாதத்தின் முதல் நாளையே புத்தாண்டாக கொண்டாடி வருகிறார்கள் தமிழர்கள் என்பதற்கு சான்றுகள் பல இருக்கின்றன என்று அறியக்கிடக்கிறது. வானியலையும் , பருவங்களின் சுழற்சியையும் அடிப்படையாகக் கொண் டே சித்திரைத்திருநாள் புத்தாண்டாக மலர்ந்திருக்கிறது எனலாம். பூமியானது சூரியனை ஒருமுறை சுற்றிவருவதற்கு எடுக்கும் காலம் பனிரெண்டு மாதங்களாகும்.சூரியன் பூமத்திய ரேகையில் பிரகாசிக்கும் மாதம் ஆண் டினது தொடக்கமாகக் கருதப்படுகிறது.சூரியன் முதல் ராசியான மேஷ ராசிக்குள் நுழைவ திலிருந்து அந்த ராசியைவிட்டு வெளி யேறும் வரையுள்ள காலமானது சித்திரை மாதமே யாகும்.

அகத்தியரின் ' பன்னீராயிரத்தில் ' பங்குனி மாதத்தை கடை மாதம் என்று காட்டப்படுகிறது. சங்க இலக்கியம் தமிழர்தம் பொக்கிஷமாகும். அந்த பொக்கிஷத்திலேயே சித்திரைத் திரு நாள் - புத்தாண்டு என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன என்பதும் மனங்கொள்ளத் தக்கதா கும்.' நெடுநெல் வாடையில் 160-161 வரிகளில் “ திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக “ என்று நக்கீரர் பகுருகின்றார். இப்பாடலில் வரும் ' ஆடுதலைக்கு ' மேஷ ராசி என்று பத்து ப்பாட்டு ஆராய்ச்சி நூலின் வாயிலாக முனைவர் மா.இராசமாணிக்கனார் தெளிவு படுத்து கிறார். “ தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை “ என்று மலைபடுகடாம் என்னும் சங்க ப்பாட்டு காட்டுகிறது. அதாவது - பங்குனி மாதத்தின் கடைசி சித்திரை மாதத்தின் முதல் நாளிலேதான் வேங்கை மரங்கள் வழக்கமாகப் பூக்கும் என்பது இதன் பொருளாகும். அது மட்டுமல்ல “ கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால் “ என பழமொழி நானூறு சுட்டிக் காட்டுவதால் - இளவேனில் காலத்தின் துவக்கமானாது சித்திரையே என்பதும் அதுவே தலைநாளாக மிளிர்ந்தது என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?.

சீவகசிந்தாமணியிலும் கோடை காலமே முதலாவது பருவம் என்று சுட்டுவதும் நோக்கத்த க்கதே. மேலும் ' புஷ்பவிதி ' என்னும் நூலிலே “ சித்திரை முதல் மாதமே “ என்று கமலை ஞானப் பிரகா சரும் விளக்கம் அளித்துள்ளமையும் கருத்திருத்த வேண்டியதே.

சூரியனின் சுழற்சியை வைத்துத்தான் புத்தாண்டைக் கணக்கிடலாம். அப்படித்தான் கணக்கி டப் பட்டும் வருகிறது அதனால்தான் சித்திரைத் திருநாள் புத்தாண்டாய் மலர்கிறது. தைமா தம் என்பது மகர ராசியில் வருகிறது. மகரராசி என்பது வானிலைப்படி பஞ்சாங்கப்படி பத் தாவது ராசியாகும். பத்தாவது ராசியில் வரும் தை எப்படி புத்தாண்டாய் அமைய முடியும் மேஷ ராசிதான் முதலாவது ராசி என்பதற்கே ஆதாரங்கள் இருப்பதாலும் அதனையே இலக் கியச் சான்றுகள் உறுதிப்படுத்துவதாலும் மேஷத்தில் சூரியன் நுழையும் காலமாக சித்திரையே பொருந்தி வருவதாலும் புத்தாண்டினைச் சித்திரையில் கொண்டாடி வருவதே வரன் முறையாக இருக்கிறது என்பது சித்திரைத் திருநாள் கொண்டாடி மகிழும் வேளை யாவரும் மனமிருத்தலே பொருத்தமானதாகும்.

இளவேனில் காலத்தில்த்தான் சித்திரையே ஆரம்பிக்கின்றது. இதனையே வசந்தகாலம் என்று அழைக்கின்றனர்.வசந்த காலத்தில்த்தான் மாமரங்களில் மாந்தளிர்களும் மலர்களும் பூத்துக் குலுங்குகின்றன. வேப்பமரங்களிலும் வேப்பம் பூக்களும் பூத்துக் குலுங்குகின் றன.மாமரங்கள் பூத்துக் குலுங்கினால் நல்ல சுவையான மாங்கனிகள் கிடைக்கும். சுவை த்தால் இன்பமே பெருகும். வேம்பின் குணமோ கசப்பு. வேம்பம் பூவின் நிலையும் கசப்பு த்தான். கசப்பான வேம்பும் , இனிப்பான மாவும் ஜொலிக்கும் காலம்தான் சித்திரைத் திரு நாள். அதாவது இனிப்பும் கசப்பும் நிறைந்ததுதான் மனித வாழ்க்கை என்பதை இயற்கையே உணர்த்தி பாடம் நடத்தும் காலம்தான் புத்தாண்டாய் வருவிருக்கும் சித்தைரைத் திருநாள் என்பதை மனமிருத்தல் அவசியமானதாகும்.

சித்திரை என்று நினைத்தாலே பெரும் எதிர்பார்ப்புகள் வந்தே நிற்கும்.” பங்குனிபோய் சித் திரை வந்தால் பத்திரிகை வந்திடும் கல்யாணப் பத்திரிகை வந்திடும் “ என்று ஒரு பாட்டும் பிரபல்யமாய் ஒலிப்பதைக் கேட்டிருக்கிறோம். அப்படி என்றால் - சித்திரை என்பது வாழ் வில் நல் முத்திரை பதிக்க வரப் போகிறது என்பதுதானே அர்த்தம் ! சித்திரைத் திருநாள் தமிழர்தம் உள்ளங்களில் உவகையினை ஏற்படுத்தும் நாளாகவே அமைகிறது எனலாம்.

(5ஆம் பக்கம் பார்க்க...)

## கல்முனையன்ஸ் போரத்தின் ஸஹர் உணவு விநியோக செயற்றிட்டம் வெற்றிகர நிறைவு

(எம்.என்.எம்.அப்ராஸ்)

புனித நோன்பு நாள்களில் கல்முனை பிராந்தியத்திலுள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களுக்கும் மற்றும் தூர பிரதேசங்களிலிருந்து கல்முனைக்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தந்தவர்களுக்குமான இலவச ஸஹர் உணவு விநியோகிக்கும் செயற்றிட்டத்தை இவ்வருடமும் (2024)கல்முனையன்ஸ் போரம் மிக வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

தூர இடங்களிலிருந்து கல்முனை பிராந்தியத்திற்கு பல்வேறுபட்ட தேவைகளுக்காக வருகை தருபவர்கள் புனித நோன்பை நோற்பதற்கான ஸஹர் உணவை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றமை பற்றி கல்முனையன்ஸ் போரத்தின் கவனத்திற்கு எட்டப்பட்டதால் இச்செயற்றிட்டம் கடந்த ஆறு வருடங்களாகத் தொடர்ந்து தங்குதடையின்றி முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் நோன்பு ரமழான் முழுவதும் மொத்தமாக 4164 நோன்பு பிடிக்கும் ஸஹர் உணவு ஏற்பாடுகளை கல்முனை,மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேசங்களுக்கு எவ்வித தடைகளுமின்றி உரிய ஸஹர் நேரத்திற்கு நோன்பாளி களின் இடத்துக்கே சென்று மேற்படி ஸஹர் உணவானது ரமழான் காலத்தில் மாலை 5 மணியிலிருந்து இரவு 7 மணி வரைக்கும் தொலைபேசியூடாக கிடைக்கப்பெறும் முன்பதிவுகள் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி வீதி விபத்தில் உயிரிழப்பு

*யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி உயிரிழந்துள்ளார்.*

*தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரியான கோண்டா விலை சேர்ந்த கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் (வயது 56) என்பவரே உயிரிழந்துள்ளார்.*

*பாடசாலை ஒன்றில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் கலந்து கொள்வதற்காக, வியாழக்கிழமை கோப்பாய் - கைதடி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை எதிரே வந்த டிப்பர் வாகனம் வேக கட்டுப்பாட்டை இழந்து இவர் மீது மோதி விபத்துக்கு உள்ளானது.*

*விபத்தில் படுகாயமடைந்தவரை சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

*இந்து நாகரிகம் மற்றும் தமிழ் பாடங்களை உயர்தர மாணவர்களுக்கு கற்பிப்பதில் சிறந்தவராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*(05)*

## சித்திரைத் திருநாளை.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

புத்தாடை வாங்குவது ! விதம்விதமாய் பலகாரங்கள் செய்வது ! பட்டாசு மத்தாப்பு என்று வாங்கிக் குவிப்பது ! வீட்டுக்கு வெள்ளை அடிப்பது! வீட்டை அழகு படுத்துவது ! ஒரே கல கலப்புத்தான்!

சித்திரைப் புதுவருடம் என்றவுடன் மருத்துநீர் முனவந்து நிற்கும் ! மருத்துநீர் என்பது மருத் துவத்தின் ஒரு பங்களிப்பே எனலாம். தமிழர்கள் எதைச் செய்தாலும் அதற்குள் மருத்துவத் தையும் இணைத்தே விடுவார்கள். இது தமிழர்களின் அத்தனை கொண்டாங்களிலும் ஒட்டிக் கொண்டே இருக்கும்.

தாழம்பூ , தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில் வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம்,கோமயம், கோரோசனை, மஞ்சள் , திற்பலி, சுக்கு, இவற்றை நீரிலை கல ந்து காய்ச்சி எடுப்பதுதான் ‘ மருத்து நீர் ‘ என்னும் சித்திரைத் திருநாள் விஷேட மருந்துவம் ஆகும். இந்த மருத்து நீரை அனைவரும் தலையில் வைத்து பின்னர் நீராடுதல் என்பது அவசியமானதாகச் சொல்லப்பட்டு பெரும்பாலும் அனைவருமே செய்து வருகின்றனர். கொண்டாட்டம் என்றாலும் அதிலும் ஆரோக்கியத்தை அடிப்படையாக வைத்திருப்பது கவனதுக்குரியது அல்லவா ?

மருத்துநீர் வைத்து நீராடிய பின்னர் வாங்கிய புத்தாடைகளை அணிவது வழக்கமாக இரு ந்து வருகிறது. புத்தாடை அணிந்து கோவில் சென்று தரிசனம் செய்து பெரியவரிடம் ஆசி பெற்று பலவகையான பச்சணங்களை உண்டு மகிழ்வதும் வழமையாக இருக்கிறது.

பெரியவர்களிடம் ஆசிபெறுவது , கைவிசேசம் வாங்குவது சித்திரைப் புத்தாண்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பெரியவர்களின் வாழ்த்து என்றுமே துணைநிற்கும் என்ப தும் அவர்களிடம் பெறும் கைவிசிசேசம் அந்த ஆண்டு முழுவதலும் இலட்சுமி கடாட்சமாய் ஜொலிக்கும் என்பதும் மனத்தில் பதியும் அசையாத நம்பிக்கை எனலாம். கோவில்களில் திருவிழாக்கள் இக்காலத்தில் சிறப்பாக இடம் பெறும். பெரும்பாலும் அனைவருமே கோவில் வழிபாட்டை தவறாமல் பயபக்தியுடன் செய்திடத் தவறவே மாட்டார்கள்.

கலைவிழாக்களுக்குக் குறைவிருக்காது. விளையாட்டு நிகழ்சிகளும் நடை பெறும். கிழகிலங்கைப் பகுதிகளில் ஊஞ்சல் கட்டி அதில் சிறியவர் முதல் பெரியவர்வரை அமர்ந்து ஆடிப் பாடி மகிழ்வது சித்திரைத் திருநாளில் பெரியதொரு விசேசமாய் நடந்து கொண்டே இருக் கிறது. யாழ்ப்பாணத்தில் இந்த நிலை இல்லை என்றே சொல்லாலாம். கிழக்கிலங்கையில் சில பகுதிகளில் புத்தாடை வாங்கினால் முதலில் அதனை வீட்டிலிருக்கும் தென்னைக்கு கட்டி அதன் பின்னே அவர்கள் தாங்கள் கட்டிக் கொள்ளும் வழமையும் இருந்து வருகிறது. ஆனால் இம்முறை யாழ்ப்பாணப்பாணப்பகுதில் இல்லை எனலாம்.

அச்சு முறுக்கு, சீனிப்பணியாராம், பயத்தம் பணியாரம், கிழக்கிலங்கையில் சித்திரையில் அதிக மாக எல்லா வீடுகளிலுமே செய்வார்கள். யாழ்ப்பாணத்தில் இவை எல்லாம் செய் தாலும் அவர்கள் தங்களுக்கென்று சிறப்பான பலவற்றையும் செய்து பகிர்ந்துண்டு மகிழ் வார்கள்.

உறவுகள் ஒன்று சேர்வது , உணவுகளில் அறுசுவை சேர்ப்பது, பக்கத்து வீட்டாருக்குப் பகிர் ந்து மகிழ்வது, வறுமையில் இருப்பார்க்கு இயன்றவற்றைக் கொடுத்து அவர்களையும் மகிழ் விப்பது, இயன்றவரை தான தர்மம் செய்வது சித்திரைப் புத்தாண்டில் இடம்பெறும் முக்கிய மான பண்பாடு எனலாம்.

இலங்கையில் சித்திரைப் புத்தாண்டினை சிங்கள பௌத்தர்களும் கொண்டாடி மகிழ்கிறார்கள் என்பதும் அரசாங்க பொதுவிடுமுறை தினமாக இருக்கிறது என்பதும் மனங்கொள் ளத்தக்கதாகும். தமிழர்கள் பலவித பலகாரங்கள் செய்வார்கள். ஆனால் சிங்கள பௌத்த ர்கள் பாற்சோறு வைத்துப் பரிமாறி மகிழ்வார்கள். அவர்களும் பெரியவர்களிடம் வெற்றி லையில் கைவிசேசம் பெற்று ஆசி யும் பெறுவார்கள். ஆளும் இனமும் ஆளப்படும் இனமும் கொண்டாடி மகிழும் கொண்டாட்டமாய் சித்திரைப் புத்தாண்டு இலங்கையில் விளங்கு வதும் முக்கியத்துவம் மிக்கதாய் தென்படுகிறது அல்லாவா !

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற தமிழர்களும் சித்திரைத் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழுகின்றார்கள். எங்கு சென்றாலும் பண்பாட்டுக் கோலங்களை தமிழர்கள் விட்டுவிடாமல் அதனைப் பற்றியே இருக்கிறார்கள்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,

ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens

Victoria Park, Kande Ela Educational Forest Park

Lunugamvehera National Park, Yala National Park

Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மருதமுனையில் சிறப்பாக நடைபெற்ற புனித அல்குர் ஆன் சம்பியன் விருது

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

புனித அல்குர்ஆன் அருளப்பட்ட ரமழான் மாதத்தில் மருதமுனை மத்ரஸதுல் தாறுல் ஹனான் அல்குர்ஆன் கற்கைகள் நிலையம் அதன் 12 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்து நடத்திய மாபெரும் 'அல்குர்ஆன் சம்பியன் விருதுக்கான போட்டி - 2024 ' நிகழ்வுகள் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மருதூர் கொத்தன் கலையரங்கத்தில் கடந்த 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்றது.

மத்ரஸதுல் தாறுல் ஹனான் அல்குர்ஆன் கற்கைகள் நிலையத்தின் அதிபர், அல்-ஹாபிழா எஸ்.றினோசா (ஷாஹவியா) நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஷாஜகான் பாத்திமா சஹானா கிராஅத் ஓதி நிகழ்வை ஆரம்பித்தார். இதனை அடுத்து மத்ரஸா பற்றிய அறிமுக உரையை அல்ஹாபிழ், எஸ்.எம். றியாஸ் (நளீமி) நிகழ்த்தினார். பின்னர் அதிதியாக கலந்து கொண்ட மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எம். ஹிர் பகான் ரமழான் மாதத்தில் மாணவர்களின் இஸ்லாமிய மற்றும் அல்குர்ஆன் சிந்தனை, ஒழுக்க விழுமியங்களை தாங்கிய கல்வியின் அவசியம், சமூக பொறுப்பு குறித்து உரையாற்றினார். இதனை அடுத்து போட்டிகள் நடைபெற்றன. பிரிவு ஒன்றில், ஹிப்ழு (மனனம்), குர்ஆனிய ஹதீஸ், வினா விடை என்பன இணைந்த போட்டியாக தரம் 3, 4, 5 ஆண், பெண்களுக்கும் தரம் 6,7,8 பெண்களுக்கும், தரம் 9, 10, 11 இல் கல்வி கற்கும் பெண்களுக்கும் என மூன்று நிகழ்வாக நடைபெற்றன. பிரிவு இரண்டு கிராஅத், குர்ஆனிய ஹதீஸ், வினா விடை என்பன இணைந்த போட்டியாக, தரம் 6,7,8,9 இல் கல்வி கற்கும் பெண் மாணவிகளுக்கு மாத்திரம் நடைபெற்றது. பிரிவு மூன்று எழுத்தணி போட்டி் தரம் 10 தொடக்கம் 13 வரை கல்வி கற்கும் பெண்களுக்கான போட்டியாக நடைபெற்றது. பிரிவு நான்க் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான அல்குர்ஆன் கிராஅத் போட்டி நடைபெற்றது. இவை தவிர போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான ரமழான் கூப்பன் வழங்கப்பட்டு குலுக்கல் முறையில் அதிர்ஷ்டசாலி தெரிவு செய்யப்பட்டு பெருநாள் தினத்தன்று பணப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

பாடசாலை விடுமுறை காலத்தில் மாணவர்களின் மார்க்க கல்வியை அதிகரிக்கச் செய்ய வேண்டும். மாணவர்கள் ரமழான் மாதத்தின் மாண்புகளை பெற்று தமது சமயக் கடமைகளை முன்னெடுக்க வேண்டும். இக்காலப் பகுதியில் அல்குர்ஆன், அல்- சுன்னா போன்ற நடவடிக்கைகளில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். அதனூடாக ஒழுக்க நெறி தவறாத மாணவர் சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப வேண்டும் போன்ற பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்ற இந்த அல்குர்ஆன் கிறாஅத் போட்டியில் பிரதேசத்தில் உள்ள பல மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான கிறாஅத் போட்டி பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலங்களில் இன்னும் சிறப்பாக நடத்த வேண்டும் என பலரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர். போட்டி நிகழ்வின் போது நிந்தவூர் பிரதேசத்தை சேர்ந்த அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் ஏ. டபுள்யூ. எம். கலீமுத்தீன் (பலாஹி), அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் என்.எம். அஹ்ஸன் (இன் ஆமீ) அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் ஏ.பி.எம்.ஷிம்லி ஆகியோர் போட்டி நிகழ்ச்சிகளுக்கு நடுவர்களாக கலந்து கொண்டனர். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி இந்த அல்குர்ஆன் சம்பியன் விருது வழங்கல் நிகழ்வு வெகு விமர்சையாக இடம்பெறவுள்ளது. இதன் போது ஒவ்வொரு போட்டி பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசுகள் மற்றும் விருதுகள் என்பன வழங்கி வைக்கப்படவுள்ளதுடன் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# அண்ணன் தாக்கி தம்பி உயிரிழப்பு

கலஹா பொலிஸ் பிரிவுக்குப்பட்ட நில்லம்பை யோகலெட்சுமி தோட்டத்தில் தம்பியை அண்ணன் ஒருவர் அடித்து கொலை செய்துள்ள கொடூர சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

யோகலெட்சுமி தோட்டத்தைச் சேர்ந்த 32 வயதான கிட்ணசாமி கருணாநிதி (கவுன்டர்) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய அண்ணன் சில தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலையில் இருந்து வந்துள்ளார். அதன்பின்னர் அநுராதபுரம் பகுதியில் கூலி வேலை செய்துவந்த நிலையில் வியாழக்கிழமை மதியம் திடீரென ஊருக்கு வந்துள்ளார்.

அண்ணனுக்கும், தம்பிக்கும் இடையில் காணி பிரச்சினை இருந்து வந்த நிலையில், அது தொடர்பில் வியாழக்கிழமையும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதையடுத்து இரவு அது சண்டையாக மாறியுள்ளது.

இதன்போது அண்ணன் கத்தி மற்றும் போத்தலால் தம்பியின் தலைப்பகுதியில் தாக்கிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். கைகள் கட்டப்பட்டிருந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் அண்ணன் தப்பிச்செல்ல முற்பட்டபோது நில்லம்பை பஸ் நிலையத்தில் வைத்து அண்ணனை ஊர் மக்கள் மடக்கிப்பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் மற்றும் கம்பளை தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம், பிரேத பரிசோதனைக்காக பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (05)

# இலங்கையின் தெற்கே ஆழ்கடலில் 200 கிலோ போதைப்பொருள்கள்

## 2 படகுகளுடன் சிக்கின

*ஹெரோயின் அல்லது ஐஸ் போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் 200 கிலோ போதைப்பொருளுடன் இரண்டு மீன்பிடிப் படகுகள் இலங்கையின் தெற்கு ஆழ்கடல் பகுதியில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*இரண்டு படகுகளிலும் காணப்பட்ட 10 இலங்கை மீனவர்களும் கைதுசெய்யப்பட்டனர் எனக் கடற்படைப் பேச்சாளர் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.*

*(05)*

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்











4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## தேசிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும்ஒருதொகுதிவிளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். சந்திப்புக் குறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

யாழ் மாவட்டத்தில் குறிப்பாக பாடசாலைகளிலிருந்தே விளையாட்டுத்துறை மாணவர்களுக்கு அடித்தளமிடப்பட்டு வருகின்றது. அதேபோன்று இங்கு பிரத்தியேகமாக விளையாட்டு துறையை பயிற்றுவிப்பதற்கான பொறிமுறையும் சார் கட்டமைப்பும் இல்லை. குறிப்பாகபாடசாலைகளில் மிக கஸ்டப்பட்டு மாணவர்களை விளையாட்டுக்களின் துறையில் பிரகாசிக்கச் செய்ய தொடங்கினால் அந்த பயிற்சியாளர்களாக இருக்கும் உடற்கல்வி ஆசிரியர்கள் இடமாற்றத்திற்கு உள்ளாக் கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. இதனால்குறித்த பாடசாலையின் அந்த விளையாட்டு பயிற்சி வேறொரு ஆசிரியரிடம் கைமாறும் போது அதில் குழப்ப நிலைகளும் தளர்வுகளும் ஏற்படும் சூழல் காணப்படுகின்றது.

இதேவேளை மாணவர்களின் சூழலுக்கேற்ப உடற்கல்வி ஆசிரியர்கள்தம்மைமாற்றியமைத்து வீரர்களின்திறமைகளைஉருவாக்கி வரும் நிலையில் இவ்வாறான இடமாற்றங்கள் வரும்போது பல பாடசாலைகளில் மீண்டும் அத்துறையை ஆரம்பத்திலிருந்து தொடங்கவேண்டிய நிலையும் உருவாகின்றது. இது பெரும்பாலும் கிராமப்புற பாடசாலைகளை பாதிக்கிறனது. இதேநேரம்கிராமப்புற பாடசாலைகளில்தான் அதிகளவான விளையாட்டு திறன் மிக்க வீரர்கள் இருக்கின்றனர்.

விளையாட்டுத்துறையில்தேசிய ரீதியில் எமது மாகாணம் 7 ஆவது நிலையிலேயே இருக்கின்றது. அதிகளவான இளைஞர்கள் இருந்தும் இந்த நிலைக்கு காரணம் அத்துறையை வலுவானதாக பரிணமிக்கச்செய்யும்வகையிலான பொறிமுறை இன்மையே ஆகும்.

இதை மாற்றியமைத்து எமது மாணவர்கள் விளையாட்டுத் துறையில் தேசிய ரீதியில் சாதனையாளர்களாக உருவாக்க, காலத்துக் கேற்றவகையிலானவிளையாட்டுத் துறைசார் அனைத்து வளங்களும் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

அதேபோன்று நிர்வாக கட்டமைப்புகளிலும் புதிய உத்திகள் கொண்டவரப்படவேண்டியது அவசியமாக உள்ளது என்றும் அமைச்சரிடம் தெரிவித்தோம் - என்றனர்.

இவ்விடயம்தொடர்பில்விரிவாக ஆராய்ந்து தீர்வகளை காண முயற்சிப்பதாகவும் அத்துடன் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இவ்வடயத்தை உள்ளடக்குவதாகவும் அமைச்சர் வாக்குறுதியளித்தார் என்றும் தெரிவித்தனர்.

## சஜித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஆகவே சஜித் பிரேமதாச, மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரிடத்தில் நான் பகிரங்கமான கோரிக்கையை விடுக்கின்றேன். அவர்கள் தகமையாகக் கொண்டிருக்கும் பட்டப்படிப்பு ஆவணத்தை வெளிப்படுத்துங்கள். ரணில் விக்கிரமசிங்கவின் தகுதி இந்த நாட்டின் அனைத்து தரப்பினரும் அறிந்ததொன்றாகும். தேவையென்றால்அவர்அதனையும் வெளிப்படுத்ததயாராகவேஉள்ளார்.


சட்டத்துறையில், பொருளாதாரத்தில் அவர் கொண்டிருக்கும் ஆழமான அறிவினை தற்போது நாம்நடைமுறையில்பார்கின்றோம். அவரே இந்த நாட்டை மீட்கவல்ல தலைவராக இருக்கின்றார். அவரே அடுத்த தோர்தலில் வேட்பாளராக களமிறங்குவார் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# 'ஒரு நாடு' என்ற அடிப்படையில் முன்னேற காரணம் சமூக உறவுகளும் ஒற்றுமையுமே

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புத்தாண்டுச் செய்தி



புதிய ஆண்டில் 'ஒரு நாடு' என்ற வகையில் சரியான வழியில் முன்னேறுவதற்கு சமூக உறவுகளும் ஒற்றுமையுமே அடிப்படைக் காரணிகளாகும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிப்பவை வருமாறு -

புதுப்பித்தல் வாழ்க்கைக்கு புதிய நம்பிக்கை தரும். புதுப்பிப்புக்களின் அடிப்படையிலேயே நாடு, உலகம் முன்னேற முடியும். புதிய சிந்தனைகளாலேயே புத்தாக்கம் பிறக்கும். புதிய வருடம் பிறத்தல், புதிய நாட்காட்டி, பருவத்துக்குப் பருவம் ஏற்படும் புதிய மாற்றங்கள் உலக மக்களுக்கான வாய்ப்புக்களை புதுப்பிக்கின்றன.

இந்த புதுப்பித்தல்களுக்குப் பின்னால் மற்றொரு மிக முக்கியமான விடயமும் உள்ளது. அதுவே சமூக ஒற்றுமையும் ஒருமைப்பாடும் ஆகும்.

தமிழ், சிங்களப் புத்தாண்டை உறவுகளையும் ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்டே புதுப்பித்துக்கொள்கிறோம். உலக நாடுகள் அனைத்தும் இந்த சம்பிரதாயத்தைப் பின்பற்றியே புத்தாண்டு கொண்டாட்டங்களை கட்டமைத்துள்ளன.

புத்தாண்டு நமக்கு சொல்லும் பாடத்தை இந்த தருணத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது என நம்புகிறேன்.

புதிய ஆண்டில், ஒரு நாடு என்ற வகையில் சரியான வழியில் முன்னேறுவதற்கு சமூக உறவுகளும் ஒற்றுமையுமே அடிப்படைக் காரணிகளாகும் என்பதை நினைவுகூருவதோடு அனைவருக்கும் புத்தாண்டு பிறப்பு சிறப்பானதாக அமையட்டும் என பிரார்த்திக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (05)

# பெருமைமிகு நாட்டை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் சஜித்



ஒவ்வோர் இருண்ட யுகத்திலும் ஒரு வெள்ளிக் கோட்டைப் பார்ப்பது போல, இந்த இருண்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் ஒரு வளமான யுகத்தை உருவாக்கவும் அணிதிரள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மீன ராசியில் இருந்து மேஷ ராசிக்கு சூரி யன் பெயர்ச்சியுடன் தொடங்கும் சிங்கள, தமிழ் புத்தாண்டை உலகில் உள்ள மற்றும் இலங்கை வாழ் சிங்கள, தமிழ் மக்கள் வெகு விமர்சையாகக் கொண்டாடும் பண்டிகை எனவும் குறிப்பிடலாம்.

இலங்கையின் மாபெரும் கலாசார விழாவாக அறியப்படும் இந்நாளில், அனைவரும் ஒரே சுப நேரத்தில் இருந்து ஒரே கடமையில் ஈடுபடும் இந்த சம்பிரதாயத்தின் காரணமாக சிங்கள, தமிழ் புத்தாண்டு உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாகக் காணப்படுகிறது.

இந்த நாளில் அனைத்து மக்களும் எதிர்வரும் ஆண்டில் செழிப்பு மற்றும் சௌபாக்கியத்தை எதிர்பார்த்து, தங்களால் இயன்றவரை இந்த சடங்குகளை செய்கின்றனர். ஆனால், கடந்த காலம் இலங்கை வாழ் மக்களுக்கு சிறந்த காலப் பகுதியாக அமையவில்லை என்று நான் நம்புகிறேன்.

வரிச்சுமை அதிகரிப்பு, பொருள்களின் விலையேற்றம், நாட்டில் உள்நாட்டு நெருக்கடி என பல பிரச்சினைகளை நாடு எதிர்கொண்டதுடன், தற்போது தேர்தல் ஆண்டாகவும் காணப்படுகிறது.

இந்த வருடம் மக்கள் எதிர்பார்க்கும் அரசாங்கம் நாட்டில் உருவாகும் என்பதும், மீண்டும் எமது தாய்நாட்டுக்கு சுபீட்சம் வரும் என்பதும் எனது நம்பிக்கையாகும்.

மேலும், தற்போது காணப்படுகின்ற வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு, மீண்டும் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக அமைதியும் மகிழ்ச்சியும் நிம்மதியும் கொண்ட பெருமை மிக்க நாட்டை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் வந்துவிட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை முன்னைய வாழ்க்கைத்தரத்துக்கு கொண்டு செல்வது எமக்கு பாரிய சவாலாக உள்ளது. அந்தச் சவாலை 220 லட்சம் பேரும் ஒன்றாக செயற்பட்டால் சமாளிக்க முடியும். ஒவ்வொரு இருண்ட யுகத்திலும் ஒரு வெள்ளிக் கோட்டைப் பார்ப்பது போல, இந்த இருண்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் ஒரு வளமான யுகத்தை உருவாக்கவும் அணிதிரள்வோம் என கூறியுள்ளார். (05)

# விரோதங்களை மறந்து மனிதநேயம் மலர்ந்திட குரோதி வருடத்தை தமிழர்கள் வரவேற்போம்!

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்



சுயபொருளாதார மேம்பாடும், சமத்துவ சக வாழ்வும், தடைகளற்ற வழிபாடுகளும் எம்தேசமெங்கும் பரவிட பிறந்திருக்கும் குரோதி வருடம் வழி வகை செய்யட்டும், என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனது தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

மேலும், தமிழ் மக்களிடையே வளர்க்கப்பட்ட சுயநல அரசியல் விரோதங்களின் விளைவே இன்று எமது மக்கள் எதிர்கொள்ளும் அவலமிகு வாழ்வாக விளைந்து கிடக்கின்றது. இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாதோரும், தமது அரசியல் நலன்களுக்கு இவ்வாறான விரோத நிலை தொடர வேண்டும் என்ற விருப்புக் கொண்டோருமே இன்றும் எம்மத்தியில் இடைவெளிகளையும் , முரண்பாடுகளையும் வளர்த்துக் கொண்டு வருகின்றனர். ஆனால் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எமது வழிமுறையும் , அணுகுமுறையும் அதிலிருந்து வித்தியாசமானது,

எமது பிரதேசங்களில் பயன்பாடற்றுக் கிடக்கும் வளங்களை, எமது மக்களின் இருப்பிற்கோ, சூழலுக்கோ சேதாரம் ஏற்படாதவாறு பயன்படுத்தி, எமது மக்களை சுயபொருளாதாரத்தின் ஊடாக எம் தேசமெங்கும் வலுப்படுத்துவதே எமது இலக்காகும்.

அந்த இலக்கு நோக்கிய பயணத்தின் சாதனைப் பட்டியல் மிக நீளமானது. அதன்தொடர்ச்சியாக, மனிதர்கள் வாழத் தகுதியற்ற பொட்டல்வெளியை பொன்விளையும் பூமியாக மாற்ற புதிய முயற்சிகள் செய்கின்றோம். ஆய்வுகள் சரியென்றால் அதுவும் சாத்தியமாகும். பொன்னாவெளிக்கும் ஒரு புதுப்பொலிவு பிறக்கும். அதேபோன்று, எமது மக்களின் காணிகளும், புனிதமிகு வழிபாட்டு இடங்களும் மக்களிடம் சேர வேண்டும் என்பதிலும் நடைமுறை சாத்திய வழிமுறையில் நகர்வொன்றைச் செய்கின்றோம். இவ்வாறு எமது தேசத்தைக் கடந்தகால பின்னடைவுகளிலிருந்து நம்பிக்கையின் கரம் பிடித்து நல்வழி நடத்திச் செல்லும் நல்லாண்டாக பிறக்கும் குரோதி வருடம் அமைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# தேசிய நல்லிணக்கம் ஊடாக பொருளாதார சவால்களை வெற்றிகொள்ளும் வருடமாகப் புதுவருடம் அமையட்டும்!

## வட மாகாண ஆளுநர் சாள்ஸ் திடசங்கற்பம்



பல்லின சமூகம் வாழும் இலங்கை திருநாட்டில் இன, மத நல்லிணக்கத்தை மேலும் பறைசாற்றும் வகையில் ஒரு தேசிய பண்டிகையாக சித்திரை புதுவருடப்பிறப்பு கொண்டாடப்படுகிறது. தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக பொருளாதார சவால்களை வெற்றிகொள்ளும் வருடமாக மலரும் புதுவருடம் அமைய வேண்டும் என வட மாகாண ஆளுநர் தனது சித்திரை புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் கூறியவை வருமாறு -

தமிழ் மக்களின் பாரம்பரியம், தொன்மை என்பவற்றுக்கமைய சித்திரை 14 ஆம் நாள் புது வருடம் பிறக்கிறது. அதற்கமைய இந்த ஆண்டு ஏப்ரல் 13ஆம் திகதி குரோதி எனும் தமிழ் புத்தாண்டு பிறக்கிறது. இந்த புது வருடத்தில் சாந்தியும் சமாதானமும் மேலோங்கி, வறுமை நீங்கி, எல்லா வளங்களுடனும் அனைவரும் வாழ வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதே தினத்தில் சிங்கள மக்களும் தங்களின் புதுவருடப் பிறப்பை கொண்டாடுகின்றனர்.

பல்லின சமூகம் வாழும் இலங்கை திருநாட்டில் இன, மத நல்லிணக்கத்தை மேலும் பறைசாற்றும் வகையில் ஒரு தேசிய பண்டிகையாக சித்திரை புதுவருடப்பிறப்பு கொண்டாடப்படுகிறது. தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக பொருளாதார சவால்களை வெற்றிகொள்ளும் வருடமாக மலரும் புதுவருடம் அமைய வேண்டும்.

வருடப்பிறப்பின் போது பின்பற்றப்படுகின்ற சம்பிரதாயபூர்வ நடவடிக்கைகள் எம்மவர்களின் மரபுகளை தொடர்ச்சியாக பேணுகின்ற ஒன்றாகவே திகழ்கிறது.

அந்த வகையில், மருத்துநீர் வைத்துக் குளித்தல், புத்தாடை அணிதல், நறுமணங்களை பூசிக்கொள்ளுதல், மத வழிபாடுகளில் ஈடுபடுதல், பெரியோர்களிடம் ஆசி பெறுதல், கைவிசேடம் வழங்கல் ஆகிய செயற்பாடுகளினூடாக மரபுகள் பேணப்படுகின்றன. அத்துடன் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படும் போட்டிகள், கலை நிகழ்வுகளூடாக நல்லிணக்க செயற்பாடுகளும், சமரசமாக வாழும் தன்மையும் ஏற்படுகிறது.

இனி என்னை புதிய உயிராக்கி, எனக்கேதும் கவலையுறச்செய்து, மதி தன்னை மிகத் தெளிவு செய்து என்றும் சந்தோசம் கொண்டிருக்கச் செய்வாய் என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கமைய, புது வருடத்தில் புதிய சிந்தனைகளை எம்மில் தோற்றுவித்து, மகிழ்ச்சி பொங்கும் வளமான வாழ்வை பெற இறையாசிவேண்டி அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (05)

# தமிழ், சிங்கள இனங்கள் மகிழ்வாய் புத்தாண்டை கொண்டாடுவதுபோன்று சகலதும் அமையவேண்டும்

## புத்தாண்டு வாழ்த்தில் இந்துக் குருமார் அமைப்பு

நாம், தமிழ் சிங்கள புத்தாண்டை அரச விடுமுறையுடன் இரு இனங்களும் மகிழ்வாய் கொண்டாடுகின்றோம். அதனைப்போல ஒவ்வொரு கணமும் அமைய வேண்டும். ஒவ்வொரு விடயத்திலும் அமைய வேண்டும். மகிழ்ச்சியும் அதிகரிக்க வேண்டுமென இந்துக் குருமார் அமைப்பு அனுப்பி வைத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அமைதியும் புரிந்துணர்வும் நல்வாழ்வும் அமையட்டும், தமிழ் வருடங்களில் 38 ஆவது வருடமான சுப மங்களகர குரோதி என்னும் நாமத்துடன் பிறந்திருக்கும் தமிழ் புத்தாண்டானது சிறப்பான ஒரு வருடமாக அனைவருக்கும் அமைய வேண்டும். உலகமக்கள் அனைவரும் கடந்தகாலமாகப் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளோம். அதில் குறிப்பாக எமது நாட்டு மக்கள் இன்னோரன்ன துயரங்களைத் தாங்கிசகித்து வாழ்ந்து வருகின்றனர். அனைத்து சமயங்களும் வாழ்வியலை வழிகாட்டி சுட்டி நிற்கின்ற அதேவேளையில் எமது சமயமானது அன்பு, கருணை, கொல்லாமை, பிறருக்குத் தீங்கு செய்யாமை, புரிந்துணர்வு போன்ற நற்செயல்களை சுட்டி நிற்கின்றது இவைபோன்ற விடயங்கள் தொலைத்துவிட்டோம் என்கின்ற காலப்பகுதியிலேயே நாம் அனைவரும் இருக்கின்றோம்.

நாம் எமது குடும்ப உறவுகளிடம் அன்பு செலுத்துவது போல் ஏனைய இனத்தார் சமூகத்தினர் சமயத்தாருடன் அன்பு செலுத்துதல் வேண்டும். மேலும் ஒவ்வொருவருடைய தனித்துவ பண்பாட்டினை மதித்துப் போற்றுதல் வேண்டியது சிறப்பானதும் பிரதானமான ஒன்றாக காணப்படுகின்றது. அதனோடு தமிழ் மக்களாகிய நாம் எமது தேசத்தில் தொடர்ந்தும் வழிபாட்டு சுதந்திரம் உள்ளிட்ட பல சிக்கல்களை சந்தித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மேற் கூறிய அனைத்து நற்குணங்கள், விடயங்களை எம் தேசத்து அனைத்து மக்களும் பின்பற்ற வேண்டும். நாம் தமிழ் சிங்கள புத்தாண்டை அரச விடுமுறையுடன் இரு இனங்களும் மகிழ்வாய் கொண்டாடுகின்றோம். அதனைப்போல ஒவ்வொரு கணமும் அமைய வேண்டும். ஒவ்வொரு விடயத்திலும் அமைய வேண்டும். மகிழ்ச்சியும் அதிகரிக்க வேண்டும்.

புதுவருடத்தில் நாம் அனைவருக்கும் இறை பிரார்த்தனையுடன் கூடிய இன்பகரமான வாழ்வு அமைய வேண்டும் என பரம்பொருளை வேண்டி இறை பிரார்த்தனையில் ஈடுபடுவோம். இச்சமயத்திலே இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் வழிகாட்டுதலையும் நிறைந்த இறை பிரார்த்தனையும் நல்லாசிகளையும் பகிர்ந்து மகிழ்ச்சியடைகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (05)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா சிறைச்சாலையில் 10 கைதிகள் விடுதலை




வவுனியா சிறைச்சாலையில் நேற்று (சனிக்கிழமை) 10 கைதிகள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் வவுனியா சிறைச்சாலையில் 10 சிறைக்கைதிகள் நேற்று காலை விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் செலுத்த வேண்டிய அபராதங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், சிறு குற்றங்களுக்காக கைதாகி தண்டனையின் பாதியை நிறைவு செய்த கைதிகளுமே இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை விடுவிக்கும் நிகழ்வில் வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் அபயரத்தன, பிரதான சிறைச்சாலை பிரதானி புத்திக்க உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் என்பவர்கள் பங்குபற்றியிருந்தனர். (05-100)

# ஒரு வடை எண்ணூறு ரூபா அதிர்ச்சியில் சுற்றுலாவி

இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்ட பெல்ஜியப் பயணியான யூட்டியூபர், டிம் டேன்ஸ் இலங்கையில் ஏமாற்றப்பட்டுள்ளதாக பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த சுற்றுலாபயணி சமீபத்தில் தனது களுத்துறை பயணத்தின் போது உணவகமொன்றில் ஒரு மோசடிக்குள்ளாகியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்-

குறித்த சுற்றுலாப்பயணி ஓட்டோவில் களுத்துறையை பார்வையிட்டதையடுத்து வாகனத்தை நிறுத்தியவுடன் அவரை ஓர் இலங்கை நபர் அணுகியுள்ளார்.

உண்மையான இலங்கை உணவு அனுபவத்திற்காக வதனி வில்லாஸ் என்ற சைவ கடைக்கு அழைத்துச் செல்ல குறித்த இலங்கையர் முன்வந்துள்ளார்.

ஆரம்பத்தில் உணவருந்தத் திட்டமிடாவிட்டாலும் ஓர் உளுந்து வடையும் சாதாரண தேநீரும் பரிமாறப்பட்ட பின்னர் 1000 ரூபா கோரியுள்ளார்.

இதில் ஏதோ தவறு இருப்பதாக உணர்ந்த அவர், விலை தொடர்பில் கேள்வி எழுப்பியதையடுத்து இதன் விளைவாக 800 ரூபா அவரிடம் அறவிடப்பட்டுள்ளது.

80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் வடைக்கு 800 ரூபா அறவிடுவதால் மோசடிக்குள்ளாகுவதை அறிந்துக் கொண்டு சுற்றுலா பயணிகளை ஏமாற்றும் இந்த நபரிடம் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் இலங்கையின் களுத்துறையில் இந்த மனிதனைத் தவிர்க்கவும் என்ற தலைப்பில் தனது யூடியூப் வீடியோவில் சுற்றுலாப்பயணி தனது அனுபவத்தை பகிர்ந்துள்ளார்.

மேலும் இலாபத்திற்காக நேர்மறையற்ற முறையில் செயற்படுவது தவறு என அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கார், மோ.சைக்கிள், ஓட்டோ மோதல் மருதமுனை பகுதியில் கோர விபத்து





(பாறுக் ஷிஹான்)

பிரதான வீதியில் பயணம் செய்த வாகனங்கள் சில நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் சிலர் காயமடைந்த சம்பவம் அம்பாறை மாவட்டம் மருதமுனை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கடும் மழை பெய்த சந்தர்ப்பத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பெரிய நீலாவணை போக்குவரத்து பொலஸார் குறிப்பிட்டனர்.

குறித்த விபத்தில் மட்டக்களப்பில் இருந்து நிந்தவூர் பிரதேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்த கார் வாகனம் மருதமுனை பிரதான வீதியில் திரும்ப எத்தணித்த போது குறித்த வீதியால் சென்றுகொண்டிருந்த ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டி பஸ் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து ஏற்பட்டது என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதன் போது மோட்டார் சைக்கிள், ஓட்டோக்களில் வந்தவர்கள் விபத்தில் காயமடைந்து வைத்து சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். தற்போது சீரற்ற காலநிலை நிலவுவதால் வீதிகளை பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும் சாரதிகள் அவதானத்துடன் செயல்படுமாறு பெரியநீலாவனை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மர்ஹூம் சாலிஹ் ஞாபகார்த்தக் கிண்ணம்: பாலமுனை 'றை ஸ்டார் பிங்' கைப்பற்றியது





(எஸ்.அஷ்ரப்கான், றியாஸ் ஆதம்)

புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு பாலமுனை றை ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய கரபந்தாட்ட போட்டியில் 'றை ஸ்டார் பிங்' அணியினர் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

பாலமுனை றை ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட மற்றும் சிறந்த கரபந்தாட்ட வீரருமான மர்ஹூம் சாலிஹ் ஞாபகார்த்தமாக அக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட கரபந்தாட்ட போட்டி அண்மையில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

றை ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் ஆசிரியருமான ஐ.எல்.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகவும், செக்டோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான நியாஸ் ஆதம் நட்சத்திர அதிதியாகவும், றை ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகர்களான அதிபர் கே.எல். உபைதுல்லா, எஸ்.ரீ.வாஹிட், கழகத்தின் முன்னாள் தலைவர் எம்.ஐ. மனாப், செயலாளர் சிபான் அசீஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இக்கரப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டிக்கு 'றை ஸ்டார் பிங்' மற்றும் 'றை ஸ்டார் வோரியஸ்' ஆகிய அணியினர் தெரிவு செய்யப்பட்டு 'றை ஸ்டார் பிங்' அணியினர் 21:15, 21:19 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தினை சுவீகரித்துக கொண்டனர்.

இதன்போது நட்சத்திர அதிதியாகக் ககலந்துகொண்ட சட்டத்தரணி நியாஸ் ஆதம் வெற்றிபெற்ற 'றை ஸ்டார் பிங்' அணியினருக்குரிய வெற்றிக் கிண்ணத்தினையும் பரிசில்களையும் வழங்கி வைத்தார். (05)

# இல்லங்களில் உள்ள சிறார்களுக்கு ஜனாதிபதி செயலகத்தால் அன்பளிப்பு



புதுவருடத்தை முன்னிட்டு சிறுவர் இல்லங்களில் உள்ள சிறார்களுக்கு ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) நாடுபூராகவும் நடைபெற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் செஞ்சோலை மற்றும் அறிவுச்சோலை சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ள சிறார்களுக்கு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்பட்டன.

மேற்படி அன்பளிப்பு பொருள்களை இராணுவத்தினர் வழங்கியிருந்தனர்

. (05 - 113)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.04.2024இல் வெளியிடப்பெற்றது